பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 20 | ஞாயிற்றுக்கிழமை | 02.06.2024 | அதிர்வு 306

## அரசில் இருந்து வெளியேறுவோம்

### எச்சரிக்கின்றது மொட்டுக் கட்சி



“அரசு தவறான வழியில் பயணிக்கும் பட்சத்தில் அரசில் இருந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி 06▶

## சைக்கிளில் கடைக்குச் சென்ற 2 சிறுமிகள் நீர்நிலையில் இருந்து சடலங்களாக மீட்பு!

### யாழ். ஊர்காவற்றுறையில் துயரம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னமடு பகுதியில் வீதிக்கு அருகேயுள்ள சிறிய நீர்நிலை ஒன்றில் இருந்து இரண்டு சிறுமிகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

11 வயதுடைய நிரோசன் விதுசா, 5 வயதுடைய நிரஞ்சன் அனுஷ்கா என்பவர்களே நேற்று இரவு 8 மணியளவில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், உறவினர்களான மேற்படி இரண்டு 06▶

## பொது வேட்பாளரை நம்பி தமிழர்களே ஏமாறாதீர்கள்!

### ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணியுங்கள் என்று முன்னணியின் செயலர் கஜேந்திரன் வலியுறுத்து



(எஸ்.நிதர்ஷன்)

**“வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற ஏமாற்றுக் கருத்துக்களுக்குள் தமிழ் மக்கள் சிக்கி விடக்கூடாது. ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்கள் அனைவரும் பகிஷ்கரிக்க வேண்டும்.”**

**- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.** 07▶

## சவக்காலைக்கு அழைத்து வரப்பட்ட குடும்பப் பெண் தலையில் பெற்றோல் ஊற்றி தீ வைத்துக் கொலை!

### யாழில் கொடூரம்; சந்தேகநபர் கைது



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் குடும்பப் பெண் ஒருவரைஆண்ஒருவர்சவக்காலைக்குஅழைத்து வந்து தலையில் பெற்றோல் ஊற்றி தீ மூட்டிப் படுகொலை செய்துள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவம்தொடர்பில்சந்தேகநபரைப்பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நகரை அண்மித்த பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, 06▶

### வவுனியா வைத்தியசாலையிலிருந்து

## தப்பிச் சென்ற சிறைக் கைதி தொடர்பில் பொதுமக்களிடம் உதவி கோரும் பொலிஸ்



வவுனியா வைத்தியசாலையிலிருந்து தப்பிச் சென்ற சிறைச்சாலை கைதி ஒருவர் தொடர்பில் தலைமன்னார் பொலிஸார் பொதுமக்களிடம் உதவி கோரியுள்ளனர்.

இவர் கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 9 வயது சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர்விளக்கமறியலில்வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், வவுனியா 06▶



வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் என கருதப்படுகின்ற மூவருமே – ரணில், சஜித், அநுர மூவருமே – இன்னும் தங்கள் வாக்குத் திரட்டும் பிரச்சாரத்திற்காக சிங்கள – பௌத்த பேரினவாத வெறிப் போக்கை கையில் எடுக்கவில்லை.

அந்த வெற்றிடத்தைக் கருதியோ என்னவோ, இதுவரை காலமும் பௌத்த – சிங்கள பேரின வெறியிலேயே திளைத்து வந்த விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல போன்றோர் மௌபிம ஜனதாக் கட்சியின் ஸ்தாபகர் டிலிட் ஜெயவீரவுடன் 06▶



# 108,665 சுற்றுலாப் பயணிகள் கடந்த மாதம் நாட்டுக்கு வருகை

கடந்த மாதத்தில் மாத்திரம் ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 665 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தொடர்ந்தும் இந்தியாவிலிருந்து வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அந்த சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து 31 ஆயிரத்து 225 பேரும், மாலைத்தீவிலிருந்து 7 ஆயிரத்து 984 பேரும், ஜேர்மனியில் இருந்து 7 ஆயிரத்து 374 பேரும், பிரித்தானியாவில் இருந்து 7 ஆயிரத்து 848 பேரும் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர்.

# மரக்கறிகளின் விலை உயர்வு



பேலியகொடை மெனிங் சந்தையில் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளன என சந்தை நிலைவரங்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, ஒரு கிலோ போஞ்சிக்காய் 700 ரூபாவாகவும், ஒரு கிலோ கரட் 130 ரூபா முதல் 150 ரூபா வரையும், ஒரு கிலோ பீர்க்கங்காய் 250 ரூபாவாகவும், ஒரு கிலோ கறி மிளகாய் 350 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

ஒரு கிலோ இஞ்சி 3,800 ரூபாவாகவும், ஒரு கிலோ தக்காளி 150 ரூபாவாகவும், ஒரு கிலோ பச்சை மிளகாய் 150 ரூபாவாகவும், ஒரு கிலோ பூசணிக்காய் 80 ரூபாவாகவும், ஒரு கிலோ பீட்ரூட் 400 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டுள்ளன..

# மாணிக்கக் கற்களுடன் காலி வர்த்தகர் கைது!



80 லட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கக் கற்களைச் சட்டவிரோதமாக தாய்லாந்திற்குக் கொண்டு செல்ல முயன்ற வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய வர்த்தகரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் இரவு 09.45 மணியளவில் விமானம் மூலம் தாய்லாந்தின் பாங்கொக் நகரத்திற்குச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் சென்றுள்ளார்.

இதன்போது, விமான நிலைய அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இவரது பயணப் பொதியிருந்து 80 லட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கக் கற்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து , சந்தேக நபர் சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இவருக்கு 10 லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

# டுபாயிலிருந்து சிகரெட்டுகளுடன் வந்த இரு பெண்கள் உள்ளிட்ட மூவர் கைது



சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளுடன் மூன்று சந்தேக நபர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

டுபாயிலிருந்து விமானம் மூலம் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த காலி பிரதேசத்தில் வசிக்கும் 60 வயது நபரும் 27 வயதான பெண்ணினதும் பயணப் பொதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 40 லட்சம் ரூபா பெறுமதியான 40 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து சந்தேக நபர்கள் இருவரும் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய நபரொருவரும் 27 வயதுடைய பெண்ணொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, சந்தேக நபர்களுக்கு 2 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளுடன் பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இவர் கொண்டுவந்த பயணப் பொதிகளிலிருந்து 30 லட்சம் ரூபா பெறுமதியான 77 கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

# இயந்திரப் படகு அலையில் சிக்கி விபத்து நுரைச்சோலை மீனவர் ஒருவர் உயிரிழப்பு

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி, நுரைச்சோலை, இலந்தையடி பகுதியில் இயந்திரப் படகு மூலம் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவரின் இயந்திர படகு அலையில் சிக்கி விபத்துக்குள்ளாது. இதில் மீனவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நுரைச்சோலை, இலந்தையடிப் பகுதியைச் சேர்ந்த டபிள்யூ. ரணில் பெர்னாண்டோ (வயது - 33) எனும் இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த மீனவர், மீன்பிடித் தொழிலுக்காக இயந்திர படகில் நேற்று முன்தினம் தனது நண்பர்களுடன் கடலுக்குச் சென்ற போது, இயந்திரப் படகு பெரும் அலையில் சிக்குண்ட நிலையில் நீரில் மூழ்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது அவருடன் பயணித்த ஏனைய மீனவர்கள் நீரில் மூழ்கிய மீனவரை உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தேசமான்ய பதுர்தீன் முஹம்மது ஹிசாம், மரண விசாரணையை நடத்தினார். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரனைகைளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறு செப்டெம்பரில்!

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை எதிர்வரும் செப்டெம்பரில் வெளியிட எதிர்பார்ப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை கடந்த மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமானது.

இதில் 4 லட்சத்து 52 ஆயிரத்து 979 பரீட்சாத்திகள் தோற்றியிருந்தனர்.

இவர்களில் 3 லட்சத்து 87 ஆயிரத்து 648 பாடசாலைப் பரீட்சாத்திகளும், 65 ஆயிரத்து 331 தனியார் பரீட்சாத்திகளும் அடங்குகின்றனர்.



# மெய்வன்மைப் போட்டிகளில் இலங்கைக்குப் பல வெற்றிகள்




மெய்வன்மைப் போட்டிகளில் நேற்று இலங்கைக்கு பல வெற்றிகள் கிடைத்தன.

கடந்த சில வாரங்களாக இலங்கையின் மெய்வன்மை வீரர்கள் பல வெற்றிகளை நாட்டிற்குப் பெற்றுக்கொடுத்தனர்.

தருஷி கருணாரத்ன உள்ளிட்ட இலங்கையின் மெய்வன்மை வீர வீராங்கனைகள் தாய்லாந்து பகிரங்க மெய்வன்மைப் போட்டிகளில் நேற்று பல வெற்றிகளைப் பதிவு செய்தனர்.

தாய்வான் பகிரங்க மெய்வன்மைப் போட்டிகள் தாய்வானின் தாய்பேயில் நடைபெறுகின்றன.

மகளிருக்கான 400 மீட்டர் ஓட்டப்போட்டியில் இலங்கை சார்பாக தருஷி கருணாரத்ன மற்றும் நதீஷா ராமநாயக்க ஆகியோர் பங்கேற்றனர்.

52.48 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்த தருஷி கருணாரத்ன முதலிடம் பெற்றார்.

400 மீட்டர் ஓட்டப் போட்டியில் அவர் பதிவு செய்த சிறந்த வெற்றி இதுவாகும்.

53.93 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்த நதீஷா ராமநாயக்க நான்காம் இடத்தை பெற்றார்.

ஆண்களுக்கான 400 மீட்டர் ஓட்டப் போட்டியின் வெற்றி இலங்கையின் அருண தர்ஷன வசமானது. அவர் 45.82 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்தார்.

இலங்கையின் கயந்திக்கா அபேரத்ன 1500 மீட்டர் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடம் பிடித்தார். அவர் 4 நிமிடங்கள் 24.66 விநாடிகளில் போட்டித் தூரத்தைக் கடந்தார்.

# பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த பத்துப் பேர் கைது செய்யப்பட்டனர்

பாதாள உலக செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட விசேட 20 குழுவினரால் நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த மேலும் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது பாதாள உலகக் கும்பலுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் எனக் கூறப்படும் மேலும் 4 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கொழும்பு 13, கொழும்பு 12 மற்றும் கொழும்பு 8 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 25, 45 மற்றும் 43 வயதுடைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வெலிகமை மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 43, 30 மற்றும் 40 வயதுடைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் வடக்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில்



பொரல்லஸ்கமுவ , களனி மற்றும் கம்பஹா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 52, 39 மற்றும் 34 வயதுடைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கிங்தொட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் இதுவரை பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 1,317 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இந்தியாவில் பிடிபட்டவர்களுடன் தொடர்பு:

# தெமட்டகொடையில் கைது செய்யப்பட்ட ஒஸ்மன் புஷ்பராஜ் பொலிஸாரின் காவலில்





ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் எனும் சந்தேகத்தில் இந்தியாவில் கைதான இலங்கையர்களுடன் தொடர்புகளைப் பேணிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒஸ்மன் புஷ்பராஜை 72 மணித்தியாலங்கள் தடுத்துவைத்து விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது தெமட்டகொடையை சேர்ந்த 46 வயதான ஒஸ்மன் புஷ்பராஜ் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

இவர் இலங்கையில் இருந்து கொண்டு இந்தியாவில் கைது செய்யப்பட்ட நால்வரையும் வழிநடத்தியிருக்கலாமெனப் பாதுகாப்புத் தரப்பினரால் சந்தேகிக்கப்படுகின்றது.

ஒஸ்மன் புஷ்பராஜின் இரு இளைய சகோதரர்களும் பங்கதெனிய பகுதியில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் என்ற சந்தேகத்தில் இலங்கையர்கள் நால்வர் கடந்த 20 ஆம் திகதி, இந்தியாவின் ஹைதராபாத் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.

ஒஸ்மன் புஷ்பராஜை கைது செய்வதற்காக பொலிஸாரினால் அண்மையில் பொதுமக்கள் ஒத்துழைப்பை கோரியிருந்தமையுடன், அவர் தொடர்பான தகவல்களை வழங்குவோருக்கு 20 லட்சம் ரூபா சன்மானமும் அறிவிக்கப்பட்டிருந்தது.



## சட்டமா அதிபருக்கு சேவை நீடிப்பா? அரசமைப்பு கவுன்ஸில் கூடுகின்றது!

சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்திற்கு 6 மாத சேவை நீடிப்பு வழங்குவதற்கு ஜனாதிபதி பரிந்துரை செய்துள்ளார். இந்தப் பரிந்துரை அனுமதிக்காக அரசமைப்பு பேரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அரசமைப்பு கவுன்ஸில் கூடவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இதன்போது, பரிந்துரை தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் எனவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சய் ராஜரத்தினம் 2021 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி இலங்கையின் 48 ஆவது சட்டமா அதிபராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

# போக்குவரத்து கட்டணம் குறைக்கப்பட மாட்டாது



டீசல் விலை குறைக்கப்பட்டாலும் விலைச் சூத்திரத்திற்கு அமைய பஸ் கட்டணம் குறைக்கப்பட மாட்டாதென தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இரு சந்தர்ப்பங்களில் டீசலின் விலை தொடர்ச்சியாக குறைக்கப்பட்டாலும், அதன் வீதம் 2.8 ஆகவே காணப்படுவதாக ஆணைக்குழு கூறியுள்ளது.

பஸ் கட்டணங்களை குறைப்பதாயின், அந்த வீதமானது 4 அல்லது அதனை விடவும் அதிகமாக இருக்க வேண்டியது அவசியமென தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் சஷி வெல்கம தெரிவித்தார்.

எவ்வாறாயினும், விலைச் சூத்திரத்திற்கு அமைய, இம்மாதம் வருடாந்த பஸ் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதற்கமைய, பஸ்களுக்கான உதிரிப்பாகங்களின் விலை குறைவடைந்தமை, டீசல் விலை குறைவடைந்தமை உள்ளிட்ட 12 விடயங்களைக் கவனத்திற்கொண்டு பஸ் கட்டண திருத்தத்தை மேற்கொள்ளவுள்ளதாக சஷி வெல்கம தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து பஸ் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுவதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எரிபொருள் விலை குறைக்கப்பட்டாலும் ஓட்டோக்களுக்கும் கட்டணக் குறைப்பு மேற்கொள்ளப்பட மாட்டாதென முச்சக்கரவண்டி சாரதிகள் தொழிற்சங்கம் கூறியுள்ளது.

இதனிடையே வாகன உதிரிப்பாகங்களின் விலை அதிகரிப்பினால் தாமும் கட்டணக் குறைப்பை மேற்கொள்ளப்போவதில்லை என அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சங்கம் அறிவித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சேர்ந்து புதிய அரசியல் கூட்டணி ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

ஏற்கனவே தாம் வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கப் போகின்றார் என்று அறிவித்து செயற்பட்டு வந்தவர் டிலிட் ஜெயவீர.

அதேசமயம் புதிய கூட்டணியின் சார்பில் விமல் வீரவன்ஸவே நேரடியாக ஜனாதிபதி வேட்பாளராக இறங்குவார் என இன்னொரு பக்கத்தில் பேச்சடிபட்டது.

இப்போது அந்தக் கூட்டணி தொடர்பில் இரண்டு புதிய தகவல்களை தென்னிலங்கை அரசியல் விமர்சகர் ஒருவர் வெளியிட்டிருக்கின்றார்.

ஒன்று – அந்தப் புதிய கூட்டணியைப் பின்னணியில் இருந்து இயக்கியவர் பற்றிய செய்தி.

மற்றது – அந்தக் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் பற்றிய தகவல்.

அவை பற்றி அந்த விமர்சகர் கூறும் தகவல்கள் வருமாறு :–

இந்தப் புதிய கூட்டணிக்குள் சிங்கள – பௌத்த சக்திகளை ஒன்றாக அணிதிரட்ட ஒரு பாரிய பிரச்சாரத்தை – நகர்வை – முன்னெடுத்த ஒருவர் திரைக்குப் பின்னால் இருந்தார். அவர் வேறு யாருமல்லர், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷதான். அண்மைக் காலங்களில் கோட்டாபய நேரடி அரசியலில் ஈடுபடவில்லை என்று தெரிகிறது, ஆனால் இந்த கூட்டணிக்காகக் கட்சிகளை திரட்டுவதில் அவருக்குப் பெரும் பங்கு உண்டு என்பது உள் அரசியல் பத்தியில் தெரிகிறது.

இந்த புதிய கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் யார்? இந்தக் கூட்டணியில் இருந்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராக இருப்பவர் ஒரு பெண் வேட்பாளர். அவர் வேறு யாருமல்லர், முன்னாள் ஜனாதிபதி கோட்டாவினால் கிழக்கு ஆளுநராக நியமிக்கப்பட்ட திருமதி அனுராதா யஹம்பத்தான்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாவை ஆட்சிக்குக் கொண்டு வந்த 'வியத்மக' குழுவில் அனுராதா பலம் பொருந்திய வராக இருந்தார். அவர் சிங்கள – பௌத்த சக்திகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பெண் என்றும் அறியப்படுகிறார். அனுராதா, கோத்தாவுடன் நெருக்கமாகப் பணியாற்றியவர் என்றும் அப்போது அறியப்பட்டார்.

எவ்வாறாயினும், இந்தப் புதிய கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பான கலந்துரையாடலில், ஆரம்பத்தில் இரண்டு பெயர்கள் முன்வைக்கப்பட்டன. அந்த பெயர்களில் ஒன்று அனுராதா யஹம்பத். மற்றொரு பெயர் திருமதி சீதா அரம்பேபொல. ஆனால் சீதா அரம்பேபொல தற்போது ஜனாதிபதியுடன் நெருக்கமாகச் செயற்படும் அரச அமைச்சராக அறியப்படுவதாலும் அவருக்கு எதிராக சமூக ஊடகங்களில் பலத்த கருத்து நிலைப்பாடு உள்ளதாலும், அவரைத் தவிர்த்து அனுராதா யஹம்பத்தின் பெயர் புதிய கூட்டினால் உறுதிப்படுத்தப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தல் போன்ற முக்கியமான போரில் அனுராதா யஹம்பத் போன்ற ஒரு பாத்திரத்தை கொண்டு வருவது மிகவும் நல்ல தெரிவு என்றும் பலரும் கருதுகின்றனர். ஏனெனில் அனுராதா ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகாத சுத்தமான குணம் கொண்டவர். சிங்கள – பௌத்த பின்னணியைக் கொண்ட ஒரு பாத்திரம். ஒரு வணிகக் குடும்பத்திலிருந்து வந்தவர். படித்தவர் மற்றும் ஆளுமை மிக்கவர். இதன்படி, அவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால், சந்திரிக்காவுக்கு அடுத்த படியாக பலம் பொருந்திய வேட்பாளராக அனுராதா யஹம்பத் தெரிவார் என பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

– இப்படி அந்த விமர்சகர் குறிப்பிட்டுள்ளார்.

## அரசில் இருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வெளியேறும்." – என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் வெளியிட்டுள்ள அறிவிப்பை நாம் கண்டித்துள்ளோம். அந்த அறிவிப்புக்கும், எமது கட்சிக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை. முன்கூட்டியே தேர்தல்களை நடத்துமாறுதான் நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

ஐ.தே.க. பொதுச்செயலாளரின் அறிவிப்பு தொடர்பில் தனக்கு உடன்பாடு இல்லையெனில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அது பற்றி கட்சித் தலைவர் என்ற வகையில் தெளிவுபடுத்த வேண்டும்.

தற்போதைய அரசு தவறான முடிவுகளை எடுக்கும் பட்சத்தில் அதற்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது. அரசில் இருந்துகூட வெளியேறுவதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம்." – என்றார்.

## தப்பிச் சென்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பிலிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை, குச்சவெளிபிரதேசத்தைச் சேர்ந்த அப்துல் ரஹ்மான் என்ற நபரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

இந்தப் புகைப்படத்தில் காணப்படும் நபர் தொடர்பில் ஏதேனும் தகவல் கிடைத்தால் 07185 91364 அல்லது 07185 91370 என்ற தலைமன்னார் பொலிஸ் நிலையத் தொலைப்பேசி இலக்கங்களுக்குத் தொடர்புகொள்ளுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## சைக்கிளில் கடைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சிறுமிகளும் நேற்று மாலை சைக்கிளில் கடைக்குச் சென்றிருந்தனர்.

இந்நிலையில், கடைக்குச்சென்றசிறுமிகளைக் காணவில்லை எனத் தேடிய உறவினர்கள், வீதிக்கு அருகேயுள்ள சிறிய நீர்நிலையில் அவர்களது சடலங்கள் காணப்பட்டதை அவதானித்தனர். அவர்கள் பயணித்த சைக்கிளும் அங்கு காணப்பட்டது.

இருவரும் சைக்கிளுடன் தவறுதலாக நீர்நிலையில் வீழ்ந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இருவரது சடலங்களும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சவக்காலைக்கு அழை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
45 வயதுடைய குடும்பப் பெண் ஒருவரை ஆண் ஒருவர் மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு யாழ். குருநகர் கொஞ்சேஞ்சி மாதா சவக்காலைப் பகுதிக்கு நேற்றுப் பிற்பகல் அழைத்து வந்தார்.

அங்கு இருவருக்கும் பிரச்சினை ஏற்பட்ட நிலையில் மேற்படி ஆண், பெண்ணின் தலையில் பெற்றோல் ஊற்றி தீ மூட்டினார்.

பெண்தீயில்எரிவதைக்கண்டஅயலவர்கள் தீயை அணைத்துப் பெண்ணை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த அந்தப் பெண் நேற்று இரவு உயிரிழந்தார்.

இரத்தினவடிவேல் பவானி (வயது 45) என்ற பெண்ணே இவ்வாறு சாவடைந்தார்.

சம்பவத்துடன் தொடர்புபட்டவர் எனச் சந்தேகிக்கப்படும் நபரைப் பொலிஸார் கைது செய்ததுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






## பொதுவேட்பாளரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் யாழ். நகரில் நேற்று துண்டுப்பிரசுரம் விநியோகித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வரப்போகின்ற ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாங்கள் பகிஷ்கரிக்கின்ற துண்டுப் பிரசுரங்களை யாழ். நகரில் விநியோகிக்கின்ற செயற்பாட்டை ஆரம்பித்திருக்கின்றோம்.

எங்களைப் பொறுத்தவரையில் வடக்கு, கிழக்கு முழுவதும் எங்களால் முடிந்த வரையில் இந்த விழிப்புணர்வுப் பிரசாரத்தை மேற்கொள்ள இருக்கின்றோம்.

ஏனெனில் தென்னிலங்கை சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களின் உரிமையை ஏற்றுக்கொள்வதற்குத் தயாரில்லை. அது ரணிலாக இருக்கலாம், சஜித்தாக இருக்கலாம் அல்லது அநுரகுமாரவாக கூட இருக்கலாம்.

இவர்கள் அனைவருமே இலங்கை சிங்கள பௌத்த நாடு என்ற சிந்தனையில் ஒற்றையாட்சியை இறுக்கமாகப் பேணிப் பாதுகாப்பதை நோக்கமாக – குறிக்கோளாகக் கொண்டு தங்களுடைய தேர்தல் பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

அதுபட்டுமல்லாமல் தமிழர்களுக்கு 13 ஆவது திருத்தச் சட்டமும் இந்திய பஞ்சாயத்தும் தான் தீர்வு என்பது அவர்களுடைய நிலைப்பாடாக இருக்கின்றது. இவர்கள் அனைவருமே கடந்த காலங்களில் தமிழ்த் தேசத்துக்கு எதிரான கட்டமைப்பு சார் இனவழிப்பு செயற்பாடுகளை மேற்கொண்டவர்கள்.

2010 ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு கூட எங்களுடைய தேசத்தில் சிங்கள பௌமத்த மயமாக்கலை முன்னெடுத்துச் செல்வதில் ஒருமித்துச் செயற்பட்டவர்கள்.

ஆகவே, இந்த ஜனாதிபதித் தேர்தல் தமிழ் மக்களோடு சம்பந்தமில்லாத தேர்தல், தமிழ் மக்களை ஒடுக்குகின்ற அல்லது இல்லாதொழிக்கின்ற தலைவர்களைத் தெரிவு செய்கின்ற தேர்தல்.

இந்தட தேர்தலை தமிழர்கள் முற்றுமுழுதாகப் புறக்கணிப்பதன் மூலம் இந்தத் தரப்புக்கள் தமிழர்களோடு சமரசம் செய்கின்ற நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்பது ஒரு நோக்கம்.

இரண்டாவது இலங்கைத் தீவை மையப்படுத்திய பூகோள ஆதிக்கப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தப் பூகோள ஆதிக்கப் போட்டியில் இந்தியாவும், அமெரிக்காவும், ஐரோப்பிய தரப்புகளும் தாங்கள் விரும்புகின்ற ஒருவரை ஜனாதிபதியாக வெல்ல வைப்பதற்குப் பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொண்டு வருகின்றன.

இவ்வாறான முயற்சிக்கு நாங்களும் ஒத்துழைப்பு வழங்கத் தயார். ஆனால், எங்களுடைய நலன்களைப் பலியிட்டு அவர்களுடைய நலன்களுக்காக கண்ணை மூடிக்கொண்டு அவர்கள் விரும்புகின்ற ஒருவரை ஆதரிக்க நாங்கள் தயாரில்லை.

எங்கள் மீதான கட்டமைப்பு சார் இனவழிப்பைத் தடுக்கக் கூடிய வகையிலே ஒற்றையாட்சி முறைமையை ஒழித்து தமிழ்த் தேசம் இறைமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி அரசமைப்பை உருவாக்கப்படுமென்ற இந்த உறுதியான நிலைப்பாடு வெளிப்படுத்தப்படும் வரைக்கும் நாங்கள் இந்த ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கின்றோம்.

அதன் மூலமாக இந்தியா மற்றும் மேற்கு தரப்புக்கள் தாங்கள் விரும்புகின்ற ஒருவரை தமிழர்களைத் திருப்திப்படுத்தாமல் தெரிவு செய்ய முடியாது என்கின்ற நிலையை உருவாக்கி அவர்களுக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்தி அவர்களும் எங்களை அங்கீகரிக்கின்ற நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றைக்குப் பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பதற்குச் சில நாடுகள் முன்வந்திருக்கின்றன. பாலஸ்தீன மக்கள் மிகப் பெரிய விலையைக் கொடுத்திருக்கின்றார்கள். மிகப்பெரிய யுத்தத்தைச் சந்தித்திருக்கின்றார்கள். மிகப்பெரிய உயிரிழப்புக்களைச் சந்தித்திருக்கின்றார்கள். ஆனாலும், அவர்கள் மிக உறுதியாக இருக்கின்ற காரணத்தால் உலக ஒழுங்கிலேயே தற்போது மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஆகவே, நாங்களும் இந்தப் பூகோள போட்டியை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி மிக உறுதியாகப் பயணிப்போமாக இருந்தால் தீர்வை எட்ட முடியும்.

இன்றைக்குத் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் பேசுகின்றவர்கள் இந்தியாவினுடைய கைப்பிள்ளைகளாக இருந்து கொண்டு தமிழ் மக்களை ஏமாற்ற முயல்கின்றார்கள். இந்தியா சொல்கின்ற யாராவது ஒருவருக்கு வாக்களிக்கச் செய்வதற்காகத்தான் அந்தப் பொது வேட்பாளர் தொடர்பாக அவர்கள் பேசுகின்றார்களே தவிர இவர்கள் மக்களின் நலனடிப்படையில் சிந்திக்கவில்லைல.

கடந்த காலத்திலே 13 ஆவது திருத்தச் சட்டத்தை வலியுறுத்திக் கொண்டவர்களும், 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசோடு கூட்டமைப்பு என்ற தேசவிரோத சக்திகள் காலத்தில் ஏக்கிய ராச்சிய என்ற வரைபைத் தயாரித்தவர்களும், அதனை ஏற்று வரவேற்றவர்களும்தான் இன்றைக்குத் தமிழ்ப் பொது வேட்பாளர் என்று நாடகமாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த ஏமாற்றுக் கருத்துக்களுக்குள் தமிழ் மக்கள் சிக்கிவிடக்கூடாது. துரதிஷ்டவசமாக யாழ். வணிகர் கழகமும் அந்தத் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பது என்ற கருத்தை சில தினங்களுக்கு முன்னர் வெளிப்படுத்தியிருந்தார்கள். அதேபோன்று பல்கலைக்கழக மாணவர்களும் அவ்வாறான கருத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். ஆகவே, அவர்கள் தங்களுடைய இந்தக் கருத்து நிலைப்பாட்டை மீள வாபஸ் பெற வேண்டும்.” – என்றார்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணிலின் முழுத் தோல்வி

நாட்டின் பெரும் நெருக்கடிக்கு மத்தியில் பதவியை பொறுப்பேற்றுக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தை மீட்டார், நெருக்கடி நிலையை வெற்றிகரமாக எதிர்கொண்டு சமாளித்தார் என்றெல்லாம் அவரது தரப்பினர் பீற்றித் திரிகின்றனர்.

ஆனால் நெருக்கடியை ஒட்டிய மிக முக்கியமான கடமை ஒன்றை நிறைவேற்றாமல் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பெரும் தவறை இழைத்திருக்கின்றார் - பின்னடைவைக் கண்டிருக்கின்றார் - என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

அதுவும் நாட்டின் மூத்த - கௌரவத்துக்குரிய - சிரேஷ்ட சட்டத்தரணிகளைக் கொண்ட 'சட்டத்தரணிகள் ஒன்றிணைவு' அமைப்பு இந்தக் குற்றச்சாட்டை வெளிப்படையாகச் சுமத்தி இருக்கின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 69 லட்சம் மக்கள் ஒன்று திரண்டு வாக்களித்து, நிறைவேற்று அதிகாரத்தை கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கினர். அதன் பின்னர் நடந்த பொதுத் தேர்தலில் அவரின் தலைமையிலான அரசுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை மக்கள் கொடுத்தனர்.

ஆனால் மக்கள் வழங்கிய அந்த ஆணையை - ஜனாதிபதியின் மீதும் நாடாளுமன்றத்தின் மீதும் மக்கள் வைத்த அந்த நம்பிக்கையை - அந்த இரண்டு தரப்புகளுமே தகர்த்தழித்தனர் என்பதை அதன் பின்னர் நடைபெற்ற மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் அம்பலப்படுத்தின.

இவ்வாறானதொரு பின்னணியில், ஆட்சிக்கு வந்த தற்போதைய ஜனாதிபதியின் முதலாவது - முக்கிய - கடப்பாடு ஜனநாயகத்தைப் பாதுகாத்து, மக்களின் இறையாண்மையைச் சரிவர நிலைநாட்டுவதாகும்.

நிறைவேற்றதிகாரம், நாடாளுமன்றம் உள்ளிட்ட அரசு கட்டமைப்புகளுக்கு அவை இழந்த சட்டபூர்வமான தன்மையை - அந்தஸ்தை - மீளப் பெற்றுக் கொடுப்பதுதான், இடைக்காலத்திற்கு ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான பொறுப்பாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அவர் அதைச் செய்யவே இல்லை. மாறாக, 2023 உள்ளூராட்சித் தேர்தலை நடத்தவிடாமல் தடை போட்டு, மக்களின் இறையாண்மை வெளிப்பாட்டு உரிமையைத் தடை செய்தார்.

நாடாளுமன்றத்தின் மீதும் நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் மீதும் மக்களுக்கு அபிமானத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்குப் பதிலாக, சட்டபூர்வ தன்மைய இழந்துள்ள அந்த நாடாளுமன்றத்தை வைத்துக்கொண்டு, தமது நிறைவேற்றதிகாரத்தையும் பிரயோகித்து, அவர் தமது அடக்குமுறை மற்றும் சர்வாதிகார நிகழ்ச்சி நிரலையே முன்னெடுத்து நடைமுறைப்படுத்தி வருகின்றார் என்று சட்டத்தரணிகள் ஒன்றிணைவு அமைப்பு சுட்டிக்காட்டி இருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில்தான் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகிய இரண்டையும் இரண்டு வருடங்களுக்கு ஒத்திபோடும் சூசகத் திட்டம் குறித்து ஆளும் தரப்புக்குள் இருந்து மெல்ல செய்திகள், தகவல்களை அவர் கசிய விட்டிருக்கின்றார் என்று சட்டத்தரணிகள் ஒன்றிணைவு என்ற அந்த அமைப்பு சுட்டிக் காட்டுகின்றது.

இவ்வாறான பின்னணியில் தேர்தலை ஒத்திவைக்கும் முன்மொழிவுகள் மக்களின் இறையாண்மையை முற்றாக இழிவு படுத்தும் வேலை என்றும், அது திட்டமிட்டு அரசமைப்பைப் புறக்கணிக்கும் விடயம் என்றும் சட்டத்தரணிகள் ஒன்றிணைவு அமைப்பு சுட்டுவது முற்றிலும் சரியானதே.

மக்களின் கருத்தை - அபிலாசைகளை- விருப்புக்களை - வெளிப்படுத்தும் தேசியமட்டத் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் பொதுவில் மக்கள் விரோத - ஜனநாயக விரோத - செயற்பாடுகளன்றி வேறில்லை என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

அந்த வகையில் நாடாளுமன்றுக்கும் நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவிக்கும் உரிய சட்டபூர்வ தன்மையை - மதிப்பை - பெற்றுக் கொடுப்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழுத் தோல்வியடைந்து இருக்கின்றார் என்பது உண்மைதான்.







# கன்னியாகுமரியில் தியானத்தை நிறைவு செய்தார் பிரதமர் மோடி

கன்னியாகுமரி விவேகானந்தர் பாறையில் கடந்த 3 நாள்களாக (40 மணி நேரம்) மேற்கொண்டு வந்த தியானத்தை பிரதமர் மோடி நிறைவு செய்தார்.

தியானம் முடிந்து திருவள்ளுவர் சிலைக்கு தனி படகில் சென்ற பிரதமர் மோடி, அங்கிருந்த திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தியானத்தை முடித்த பிரதமர் மோடி தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி, சட்டை அணிந்திருந்தார்.

கன்னியாகுமரிக்கு பிரதமர் மோடி கடந்த 30 ஆம் திகதி மாலை சென்றார். பகவதியம்மன் கோயிலுக்கு சென்று வழிபட்ட பிறகு, படகு மூலம் கடல் நடுவே உள்ள விவேகானந்தர் மண்டபம் சென்றார். அங்கு பகவதியம்மனின் ஸ்ரீபாதத்தை தரிசனம் செய்தார். பின்னர், விவேகானந்தர் பாறையில் உள்ள தியான மண்டபத்தில் தியானத்தை தொடங்கினார். நள்ளிரவில் தியான மண்டபம் அருகே உள்ள அறையில் சற்று ஓய்வெடுத்தார்.

வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணி அளவில் காவி உடை, நெற்றியில் விபூதி, சந்தனம், குங்குமம் அணிந்து, வலது கையில் ருத்ராட்ச மாலையுடன் துறவிக் கோலத்தில் தியான அறையில் இருந்து பிரதமர் மோடி வெளியே வந்தார்.

ருத்ராட்ச மணிகளை உருட்டி, ஜெபம் செய்தபடியே விவேகானந்தர் பாறையை வலம் வந்தார். பின்னர், கிழக்கு நோக்கிகைகூப்பியபடி சூரிய உதய காட்சியை தரிசித்தார்.

மந்திரங்களை உச்சரித்தபடியே, தான் கொண்டு வந்த வெண்கலக் கெண்டியில் இருந்து கங்கை தீர்த்தத்தை சிறிது சிறிதாக கடலில் ஊற்றி, கங்கா வழிபாடு மற்றும் சூரிய உதயகால பூஜைகளை நடத்தினார். பின்னர், விவேகானந்தர் மண்டபம் சென்ற பிரதமர், விவேகானந்தர் சிலைமுன்பு தரையில் அமர்ந்து சுமார் அரைமணி நேரம் தியானத்தில் ஈடுபட்டார்.

பின்னர் தியான மண்டபம் சென்று தியானத்தை தொடர்ந்தார். அப்போது, அமைதியான சூழலில் 'ஓம்' எனும் பிரணவ மந்திரம் ஒலித்துக் கொண்டிருந்தது. சுமார் 5 மணி நேரத்துக்கு ஒருமுறை தியானம் முடிந்து ஓய்வெடுக்க அறைக்கு வரும்போது, பிரதமரின் உடல்நிலையை மருத்துவர்கள் பரிசோதித்தனர்.

இந்த நிலையில், மூன்றாம் நாளான நேற்று, பிரதமர் மோடி சூரிய உதய காட்சியை தரிசித்தார். பின்னர், தியானத்தை தொடர்ந்தார். பின்னர் 1 மணியளவில், தனது 40 மணி நேர தியானத்தை பிரதமர் மோடி நிறைவு செய்தார்.

# இந்திய மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு நிறைவு; மேற்கு வங்கத்தில் வன்முறைச் சம்பவங்கள் பதிவு





ஏழு கட்டங்களாக நடைபெற்ற இந்திய மக்களவை தேர்தலின் வாக்குப்பதிவு நேற்று நிறைவு பெற்றது.

மக்களவை தேர்தலின் இறுதிக்கட்ட வாக்குப்பதிவில் நற்று மாலை 05 மணி வரை 65 வீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

பீஹார், இமாச்சல பிரதேசம், ஜார்க்கண்ட், ஒடிசா, பஞ்சாப், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம், சண்டிகர் ஆகிய 8 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 57 தொகுதிகளில் நேற்று வாக்குப்பதிவு நடைபெற்றது.

அதிகபட்சமாக ஜார்க்கண்ட் மாநிலத்தில் 60.14 வீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்கு வங்கத்தில் ஒரு சில பகுதிகளில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

மேற்கு வங்கத்தின் ஒரு வாக்குச்சாவடியில் வன்முறைக் கும்பல் ஒன்று மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், தேர்தலுக்கான ஆவணங்கள் என அனைத்தையும் சூறையாடி குளத்தில் வீசியதாக மாவட்ட தேர்தல் அதிகாரி உறுதிப்படுத்தியுள்ளார்.

18 ஆவது இந்திய மக்களவை தேர்தலின் வாக்குபதிவுகள் கடந்த 19 ஆம் திகதி ஆரம்பமாகின.

இந்திய மக்களவைத் தேர்தல் 28 மாநிலங்களிலும், 8 யூனியன் பிரதேசங்களிலும் 7 கட்டங்களாக நடைபெற்றது.

வாக்குகளை எண்ணும் பணிகள் எதிர்வரும் 04 ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ளது.

# ஹமாஸ் அழியும் வரை போர் என்கிறது இஸ்ரேல் பைடனின் கோரிக்கையை நிராகரித்து அறிவிப்பு





ஹமாஸ் அழிக்கப்படும் வரை காசாவில் போர் தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீண்டும் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று முன்தினம், போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

காசா இஸ்ரேல் போர் இன்னும் நீடித்து வரும்நிலையில், கடந்த மே 26 ஆம் திகதி ரஃபா அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 45 பேர் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து உலக நாடுகளின் கவனம் ரஃபாவின் பக்கம் திரும்பியது. அண்மையில், ஸ்பெயின், அயர்லாந்து மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் கூட்டாக பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரித்துள்ளன.

இருப்பினும் நாளுக்கு நாள் மோதல் அதிகரித்து தான் வருகிறது. காசாவில் நிரந்தர அமைதி ஏற்படுத்தும் விதமாக புதிய திட்டம் ஒன்றை இஸ்ரேல் முன்மொழிந்துள்ளதாக நேற்று முன்தினம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்தார்.

அதோடு, இஸ்ரேல் முன்மொழிந்துள்ள திட்டத்தின் படி, ஆறு வார காலத்திற்குள் படிப்படியாக மக்கள் அதிகமாக இடத்தில் இருந்து இஸ்ரேல் படைகள் வெளியேறும் என்றும் போரை முடிவுக்கு கொண்டு வந்து அமைதியை ஏற்படுத்துவதற்கான இந்த வாய்ப்பை தவற விட்டு விடக்கூடாது என்றும் பணயக் கைதிகள் வெளியேற்றம் குறித்தும், ஹமாஸ் இந்த முன்மொழிவை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு போர் நிறுத்தம் தொடர்பாக, காசா போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான இஸ்ரேலின் நிபந்தனைகள் மாறவில்லை. ஹமாஸின் இராணுவத்தை அழிப்பது, அனைத்து பணையக்கைதிகளையும் விடுவிப்பது மற்றும் காசா இனி இஸ்ரேலுக்கு எந்த விதத்திலும் அச்சுறுத்தலாக இருக்காது என்பதை உறுதி செய்தல் போன்றவற்றை அழுத்தமாக வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே உடனடி போர் நிறுத்தத்துக்கு கனடா அழைப்பு விடுப்பதாக ஜஸ்டின் ட்ரூடோ பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் குறிப்பிடுகையில், “உடனடி போர் நிறுத்தம், தடையில்லா மனிதாபிமான உதவிகளை அவசரமாக அதிகரிப்பது மற்றும் பணயக்கைதிகள் அனைவரையும் விடுவிக்க கனடா அழைப்பு விடுத்துள்ளது.

இந்த துயரத்தை முடிவுக்குக் கொண்டுவர ஜோ பைடனால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவு ஒரு வாய்ப்பாகும். மேலும் அமைதிக்கான பாதைக்கு திரும்ப வேண்டும்” எனத் தெரிவித்துள்ளார்.

# ஆப்கானிஸ்தானில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 20 பேர் பலி





ஆப்கானிஸ்தானின் கிழக்கு பகுதியில் நங்கர்ஹார் மாகாணத்திலுள்ள ஆற்றில் படகொன்று கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் அடங்குகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஒரு ஆண், ஒரு பெண், 2 சிறுவர்கள் உட்பட 5 உடல்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் படகில் 26 பேர் பயணித்திருந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்புப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், விபத்திற்கான காரணம் இதுவரையில் தெரியவராத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





# பொது விவாத அரங்கு திறக்குமா? பத்தியாளர்கள் நிலை என்ன?

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்துவது தொடர்பிலான பொது விவாதமொன்று எதிர்வரும் 09ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அறிவித்திருக்கிறார். தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் அரசியல் பத்தியாளர்கள் சிலருக்கும் சுமந்திரனுக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் அண்மையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போது, தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை, பொது விவாதமாக நடத்தி ஆராய்வோம் என்று இரு தரப்புக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டது. அதன்





புருஜோத்தமன் தங்கமயில்

பின்னணியில் தான், சுமந்திரன் பொது விவாதத்துக்கான திகதியை ஊடக சந்திப்பு நடத்தி அறிவித்தார். ஆனால், தற்போது அந்த விவாதத்தில் பங்கெடுப்பதில் இருந்து, சம்பந்தப்பட்ட அரசியல் பத்தியாளர்கள் பின்வாங்கி விட்டனர் எனத் தெரிகிறது. அத்தோடு, பொது வேட்பாளர் விடயத்தை ஆதரிக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளும் கூட அந்த விவாதத்தில் பங்கெடுக்க மறுத்திருக்கின்றன. இதனால், சுமந்திரன் உள்ளிட்ட பொது வேட்பாளர் எதிர்ப்பு அணியினர் மாத்திரம் ‘தனியாவர்த்தனம்’ நடத்தும் கூட்டமாக, பொது விவாத அரங்கு நிறைவுறப் போகிறது.

பொது வேட்பாளர் விடயத்தில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர், ஆராய்ந்து முடிவெடுப்போம் என்று தமிழரசுக் கட்சி அண்மையில் நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானித்திருக்கின்றது. அந்தக் கூட்டத்திலும் பொது வேட்பாளர் விடயத்தை ஆதரித்து சிவஞானம் சிறீதரனும், பா.அரியநேத்திரனும் மாத்திரமே பேசியிருக்கிறார்கள். ஆனால், பொது வேட்பாளர் விடயத்தை எதிர்த்து பெரும்பாலான உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். பொது வேட்பாளர் விடயம் காலத்துக்கு பொருத்தமற்ற விடயம் என்ற உணர்நிலையே அங்கு நிலவியது. ஆனாலும், அதனை அவசரப்பட்டு அறிவிக்க வேண்டியதில்லை என்று மத்தியகுழு உறுப்பினர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை கடந்த ஆண்டு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினரே அரங்குக்கு கொண்டு வந்தனர். ஆனால், அவர்கள் தற்போது அதிலிருந்து பின்வாங்கத் தொடங்கிவிட்டார்கள். அதற்கான காரணமாக, தமிழரசுக் கட்சியை முன்னிறுத்தும் திட்டத்தோடு இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை தடுப்பதற்காகவே, தமிழரசுக் கட்சி பொது வேட்பாளர் விடயத்தை ஆறப்போட்டுவிட்டது. இதனால், பொது வேட்பாளர் விடயத்தில் தமிழரசுக் கட்சியின் முடிவிற்காக காத்திருந்த ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர் ஏமாற்றமடைந்திருக்கிறார்கள். குறிப்பாக, அவர்களின் நழுவல் போக்குக்கு இடையூறு ஏற்பட்டிருக்கின்றது. இந்த எரிச்சலை, தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெற்று முடிந்த சில நாளகளில் நடைபெற்ற அரசியல் பத்தியாளர்கள் உள்ளிட்ட சிவில் சமூகத் தரப்பினர் மற்றும் கட்சிகளுக்கு இடையிலான சந்திப்பில் காண முடிந்தது. தமிழரசுக் கட்சி பொது வேட்பாளர் விடயத்தை எதிர்த்தாலும், அதனைக் கண்டு கொள்ளாமல் தமிழ்ப் பொது வேட்பாளரை அறிவித்து ஆதரவு திரட்டுவோம் என்று அரசியல் பத்தியாளர்கள் முரண்டுபிடித்திருக்கிறார்கள். இது ரெலோ, புளொட் தலைமைகளை எரிச்சலூட்டியிருக்கின்றது. கள யதார்த்தம் தெரியாமல், வீம்புக்கு பொது வேட்பாளர் விடயத்தைக் கையாள முடியாது என்று அவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். இதனால், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்குள் ஈ.பி.ஆர்.எல்.எவ். மாத்திரமே பொது வேட்பாளர் விடயத்தில் உறுதியாக இருக்கின்றது. மற்றைய தரப்பினரான ஜனநாயகப் போராளிகளும் தமிழ்த் தேசியக் கட்சியினரும் முடிவெடுக்க முடியாமல் அல்லாடுகிறார்கள்.

இந்த நிலையில்தான், பொது வேட்பாளர் ஆதரவாளரான வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் ஒருவர், அரசியல் பத்தியாளர்களை சுமந்திரனை சந்திக்க வைத்திருக்கிறார். அரசியல் பத்தியா–ளர்களுக்கு சுமந்திரனைச் சந்திப்பதில் விரும்பமில்லை. ஆனால், அவரைச் சந்திக்காமல் விடயங்களை அடுத்த கட்டத்துக்கு நகர்த்த முடியாது என்பது, அந்த முன்னாள் அமைச்



சரின் நிலைப்பாடு. அதனால்தான், அவரின் ஏற்பாட்டில் சந்திப்பு நடைபெற்றது. சுமந்திரன் எந்தத் தருணத்திலும் பொது வேட்பாளர் விடயத்தை ஆதரிக்க மாட்டார் என்பது முடிந்த முடிவு. அப்படிப்பட்ட நிலையில், அந்தச் சந்திப்பு அடிப்படையில் அர்த்தமற்றதுதான். ஆனாலும், இருதரப்புகளும் ஜனநாயக உரையாடலுக்காகச் சந்தித்துக் கொண்டன எனக் காட்டிக் கொண்டன. பொது வேட்பாளர்கள் ஆதரவு பத்தியாளர்களை பொது அரங்கிற்கு அழைத்து வந்து கேள்விகளால் திக்குமுக்காடச் செய்யும் நோக்கம் சுமந்திரனிடம் இருந்திருக்கலாம். அதற்காக அவர், பொது விவாதம் என்ற விடயத்தை முன்வைத்து, இணக்கம் பெற்றிருக்கிறார். ஆனால், பொது விவாதம் என்று போனால், சிக்கல் வரும் என்று புரிந்து கொண்ட அரசியல் பத்தியாளர்கள் இப்போது அதில் பங்கெடுப்பதில் இருந்து தப்பித்துக் கொள்ள

தொடர்ச்சி ▼

# பொது விவாத அரங்கு திறக்குமா? பத்தியாளர்கள் நிலை என்ன?

தொடர்ச்சி ▲

நினைக்கிறார்கள்.

பொது வேட்பாளர் ஆதரவு பத்தியாளர்களை பொது விவாத அரங்கில் கேள்விகளால் திக்குமுக்காடச் செய்தால், எதிர்காலத்தில் பொது வேட்பாளர் விடயத்தை தூக்கிச் சுமக்க முற்படுபவர்கள் அரங்கிற்கு வரத் தயங்குவார்கள். அதனால்தான், அவசர அவசரமாக பொது விவாதத்துக்கான திகதியை சுமந்திரன், ஊடக சந்திப்பை நடத்தி அறிவித்திருக்கிறார்.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் உள்ளவர்களின் பெரும்பாலானோர் விமர்சனங்களையும் கேள்விகளையும் எதிர்கொள்வதற்கு தயாராக இருப்பதில்லை. மற்றவர்களை நோக்கி துரோகி தொடங்கி அடையாள அரசியலைச் செய்வதற்கு தயாராக இருப்பார்கள். ஆனால், அவர்களை நோக்கி ஏதாவது விமர்சனத்தையோ கேள்வியையோ முன்வைத்தால், அதனை தனிப்பட்ட ரீதியாக எடுத்துக் கொள்வார்கள். அதனை, காலத்துக்கும் பெரும் வன்மமாக கொண்டு நடப்பார்கள். அது, அரசியல்வாதிகள் தொடங்கி சிவில் சமூகப் பிரதிநிதிகளாக தங்களை முன்னிறுத்தும் புலமையாளர்கள், அரசியல் பத்தியாளர்கள் உள்ளிட்ட பலரிடமும் உண்டு. இதனால், தமிழ்ச் சூழலில் எந்தவொரு விடயம் குறித்தும் பொது விவாத அரங்கைத் திறத்தல் என்பது அவ்வளவு சாத்தியமாவதில்லை. அப்படி நிகழ்ந்தாலும் அது ஒரு கட்டம் தாண்டி அவதூறுகளின் களமாகவே இருந்திருக்கின்றன. தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை முன்வைத்து ஆதரித்து வாதிடுவோரும், அதற்கு எதிராக கருத்துக்களை முன்வைக்கும் தரப்பினரும் இன்றைக்கு இரு முனைகளில் நிற்கிறார்கள். கிட்டத்தட்ட இருதரப்பினரும் ஒருவரையொருவர் எதிரிகளாக கருதுகிறார்கள். அப்படித்தான், இரு தரப்பினரதும் நடத்தைகள் உணர்த்துகின்றன. கருத்தியல் ரீதியாக மோதிக்கொள்வது என்பது அடிப்படையில் தனி மனித விரோதமோ குரோதமோ அல்ல என்ற சின்ன புரிதல் இல்லாமல் எந்தவொரு ஜனநாயக உரையாடல் களமும் ஆரோக்கியமானதாக இருக்காது. கருத்தியல் மோதலில் வெற்றி, தோல்விகள் என்பது இரண்டாம் பட்சமானது. ஆனால், தமிழ்ச் சூழலில் விவாதத்தில் வெற்றி தோல்வி என்பது தவிர்க்க முடியாது என்பது மாதிரியான பட்டிமன்ற மனநிலை உண்டு. இதனால்தான் பொது விவாத அரங்குகளை நோக்கி பெரிதாக எந்தத் தரப்பும் நகர்வதில்லை.

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் தமிழர் தேசம் முழுவதும் பொது விவாத அரங்குகள் திறக்கப்பட வேண்டும். அதன் மூலம், பல தரப்பினரின் எண்ணப்பாடுகளும் வெளிவரும். அதன்மூலம் புதிய செயற்திட்டங்களுக்கான வாய்ப்புக்கள் உருவாகலாம். ஆனால், வெற்றி – தோல்வி என்ற முடிவு அறிவிக்கப்பட்டுவிடும் என்ற நோக்கத்தைக் குறித்துச் சிந்திப்பவர்கள், தங்களுக்கு தோதான களமில்லை என்று உணர்ந்து கொண்டதும் அதில் பங்கெடுப்பதில் இருந்து பின்வாங்குகிறார்கள். அதுபோலத்தான், பொது விவாத அரங்கு என்ற பெயரில் ஒரு விடயத்தை முன்வைக்கும் தரப்பினர், எதிர்த் தரப்பினரை செத்த பாம்பாக நினைத்து அடித்துத் தள்ளலாம் என்பதற்காக அதனை முன்னெடுக்கக் கூடாது. கடந்த பதினைந்து ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நோக்கி, தற்போது பொது வேட்பாளர் விடயத்தை ஆதரிக்கும் அரசியல் பத்தியாளர்கள் பல அரங்குகளில் விமர்சித்திருக்கிறார்கள். சில கட்டங்களில் அந்த விமர்சனங்கள் கூட்டமைப்பை மக்கள் விரோத சக்திகளாக சித்திரிக்கும் அளவுக்கு இருந்தது. ஆனால், அவர்கள் இன்றைக்கு தாங்கள் முன்னெடுத்த பொது வேட்பாளர் விடயத்துக்கான ஆதரவு இல்லை என்ற நிலையில், விடயங்களை எதிர்கொள்வதில் இருந்து ஒதுங்கி ஓடத் தொடங்கிவிட்டார்கள். கருத்து மோதலில் தனிப்பட்ட வெற்றி தோல்வி, குரோதம் என்பன இல்லை என்பதை தமிழ் மக்களுக்கு அரசியல் வகுப்பு எடுக்க எத்தனிக்கும் தரப்பினர் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அந்தப் புரிதல் இல்லாமல், அரசியலைப் பேசுதல் என்பது அபத்தம். அது, எதிர்காலத்தில் இந்த அரசியல் பத்தியாளர்கள் உள்ளிட்டவர்களை மக்கள் ஒரு பொருட்டுக்குகூட மதிக்காத சூழலை உருவாக்கும். ஏற்கனவே, தமிழ்ச் சூழலில் சிவில் சமூக வெளி காவு கொடுக்கப்பட்டுவிட்டது. தனி நபர்களுக்காக கட்சி ஆரம்பித்துக் கொடுப்பதற்காகவும், பிரபலம் தேடுவதற்காகவும்தான், சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்று தங்களை முன்னிறுத்துபவர்கள் செயற்பட்டிருக்கிறார்கள் என்பதுதான் தற்போதைய உணர்நிலை.

அதேவேளை, பொது விவாத அரங்கில் தனியாவர்த்தனம் செய்யும் நோக்கமும் அவசியமற்ற ஒன்று. அது, எதிர்காலத்தில் பொது விவாத அரங்கிற்கான வாய்ப்புக்களை முழுவதுமாக இல்லாமல் செய்துவிடும். பொது வேட்பாளர் தொடர்பில் பொது விவாதத்தை நடத்த வேண்டுமாக இருந்திருந்தால், இரு தரப்பினருக்கும் பொதுவான கட்டமைப்பைக் கொண்டு நடத்தியிருக்க வேண்டும். அதுதான், ஆரோக்கியமானதாக இருக்கும். அப்படி நடத்தியிருந்தால், அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நிலைப்பாடுகளையும் வெளிப்படையாக அறிந்து கொள்வதற்கான சூழல் ஏற்பட்டிருக்கும். அதுபோல, தமிழர் தேசத்தில் ஒவ்வொரு பகுதி மக்களும் என்ன உணர்நிலையில் இருக்கிறார்கள் என்பது பொது அரங்கில் ஆராயப்பட்டிருக்கும். ஏனெனில், அரசியல் முடிவுகள் என்பது எந்தவொரு தருணத்திலும் தனிப்பட்ட நபர்கள், தனித் தரப்புக்கள் மாத்திரம் ஆளுமை செலுத்தும் ஒன்றாக ஒருபோதும் இருக்கத் தேவையில்லை. அங்கு கூட்டு முடிவுக்கான வாய்ப்பு இருக்க வேண்டும். இப்போது, தமிழ்த் பொது வேட்பாளர் விடயத்துக்கு தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் ஆதரவு இல்லை என்பதுதான் கள யதார்த்தம். ஆனால், அது தொடர்பில் வெளிப்படையான உரையாடல்கள் நிகழ்வது வெளித்தரப்புக்களின் தேவைக்காக தமிழ்த் தேசிய அடையாளத்துக்குள் இருந்து கொண்டு இயங்கும் நபர்களை அடையாளம் காணவும் உதவும். அது எதிர்காலத்துக்கு நல்லது.

அரசியல் நிலைப்பாடுகளை எடுத்தல் என்பது அடிப்படையில் மக்களுக்கான அறமும் அதுசார் தார்மீகமும் சார்ந்ததாக இருக்க வேண்டும். அங்கு தனிப்பட்ட நலன்கள், தன் முனைப்பு மனநிலை, குரோத உணர்வு, தாழ்வுச் சிக்கல்கள் இருக்கத் தேவையில்லை. அதனை தமிழ்த் தேசிய அரசியலில் ஈடுபடும் அரசியல் கட்சியினர், புலமையாளர்கள், அரசியல் பத்தியாளர்கள் தொடங்கி அனைத்துத் தரப்பினரும் உணர்ந்து கொள்ளவேண்டும். அந்தக் கட்டத்தை அடைவதற்கான மனநிலையும் துணிவும் இல்லையென்றால், தமிழ்த் தேசிய அரசியல் பரப்பின் பின்னடைவை ஒருபோதும் சரி செய்ய முடியாது.

# 1,135 வாகனங்களைக் கூட ஒழுங்கு முறையாக நிர்வகிக்க முடியாத வடக்கு மாகாண நிர்வாகம்

- நடராசா லோகதயாளன் -



வடக்கு மாகண சுகாதாரத் திணைக்கள அலுவலரின் வினைத்திறன் இன்மை மற்றும் அவதானக் குறைவு, தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் உரிய கால எல்லைகளைப் பின்பற்றாமை போன்றவை காரணமாக 10 வாகன விபத்துகளிற்கு பெறப்பட்ட காப்புறுதிப் பணத்திற்கு மேலதிகமாக ஒரு கோடியே 50 லட்சம் ரூபா பணம் அரசிற்கு இழப்பீடு ஏறபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் கீழ் 5 அமைச்சுக்கள்,18 திணைக்களங்கள், 4 பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகங்கள், 2 ஆணைக் குழுக்கள், 2 அதிகார சபைகள் மற்றும் 3 நிறுவனங்கள் என 34 நிறுவனங்கள் உள்ளன. இவற்றின் பாவனைக்கும், மக்கள் சேவைக்காகவுமே இந்த 1,135 வாகனங்களும் உள்ளன.

இவற்றில் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் மட்டும் 383 வாகனங்களும், மாகாண கல்வித் திணைக்களத்தில் 170 வாகனங்களும், மாகாண விவசாய திணைக்களத்தில் 157 வாகனங்களும், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் 105 வாகனங்களும், நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 100 வாகனங்களுமாக 4 திணைக்களங்களில் மட்டும் 915 வாகனங்கள் காணப்படுகின்றன. எஞ்சிய 220 வாகனங்களே மிகுதி 30 திணைக்களங்களின் செயல்பாடுகளிற்காக மாகாணம் முழுவதும் உள்ளன.

இந்த வாகனங்களின் பயன்பாடு தொடர்பில் அதிக முறைப்பாடுகள் முன் வைக்கப்பட்ட நிலையில் 2023ஆம் ஆண்டு மத்திய கணக்காய்வு நிறுவனம் விசேட ஆய்வு ஒன்றை மேற்கொண்டு அதன் அறிக்கை அண்மையில் சமர்ப்பித்துள்ளது.

வடக்கு மாகாண சபையின் வாகனங்களில் இருந்து 03 வாகனங்கள் வடக்கு மாகாண சபைக்கு வெளியே 2018ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளபோதும் அவற்றை மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகளை இன்று வரை மாகாண நிர்வாகம் மேற்கொள்ளவில்லை. அதில் இரு வாகனங்கள் ஜனாதிபதி செயகத்திற்கும் ஒரு வாகனம் பொலிஸ் திணைக்களத்திற்கும் வழங்கப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையில் பயன்படுத்தி பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டதான 53 வாகனங்கள் ஏல விற்பனைக்காக சமர்ப்பிக்கப்பட்டன. இதில் 32 வாகனங்கள் 42,891 கிலோ மீற்றரில் இருந்து வெறுமனே 114 கிலோ மீற்றர் ஓடிய வாகனங்களாகக் காணப்படுகின்றன. இவற்றிலே 13




வாகனங்கள் 10 ஆயிரம் கிலோ மீற்றருக்கும் குறைவாகவும், 8 வாகனங்கள் 5 ஆயிரம் கிலோ மீற்றருக்கும் குறைவாகவும் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை எவ்வாறு சேவையிலிருந்து அகற்றப்பட்டு ஏலத்திற்குப் போயின என்பது பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாகாண சபையின் பராமரிப்புக்கள், ஒழுங்கமைப்புக்கள் இவ்வாறெனில் விபத்திற்குள்ளாகும் வாகனங்களிற்கான அறிக்கையிடல் மற்றும் காப்புறுதியை பெற்றுக்கொள்வதில் வடக்கு மாகாண நிர்வாகங்கள் அசமந்தமாக காணப்படுவதோடு, அதிலும் குறிப்பாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சு அதில் வேண்டுமென்றே அசமந்தமாக இருப்பதும் தெட்டத் தெளிவாக கண்டு கொள்ளப்பட்டுள்ளது.


வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் 13 வாகனங்கள் விபத்திற்குள்ளாகி 28 லட்சத்து 61 ஆயிரம் ரூபா செலவு மதிப்பீடு செய்யப்பட்டும் ஆரம்ப விசாரணைகள் 7 ஆண்டுகள் கால தாமதமாகியும் ஆரம்ப விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என மத்திய கணக்காய்வகம் அறிக்கையிட்டுள்ளது.

இதே திணைக்களத்தில் மேலும் 15 வாகனங்கள் விபத்திற்குள்ளாகி 12 மாதங்கள் வரையில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. சுகாதார வைத்திய அதிகாரி ஒருவர் தனது சொந்தத் தேவைக்காக அனுமதியின்றி எடுத்துச் சென்ற வாகனம் வேகமாக பயணித்த சமயம் விபத்திற்குள்ளாகி சேதமடைந்தபோது 90 லட்சம் ரூபா பெறுமதியான வாகனத்திற்கு 80 லட்சம் ரூபா செலவு மதிப்பீடு செய்யப்பட்டு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டபோதும், அந்தத் தொகை விபத்திற்குக் காரணதான சுகாதார அதிகாரியிடம் அறவீடு செய்யப்படவில்லை. வடக்கு மாகண சுகாதாரத் திணைக்கள அலுவலரின் வினைத்திறன் இன்மை காரணமாக திணைக்கள நிதியில் இருந்து இது திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று அவதானக் குறைவு காரணமாக தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கைகளிற்கு உரிய கால எல்லைகளை பின்பற்றாமை காரணமாக 10 வாகன விபத்துகளிற்கு பெறப்பட்ட காப்புறுதிப் பணத்திற்கு மேலதிகமாக ஒரு கோடியே 50 லட்சம் ரூபா பணம் அரசிற்கு இழப்பீடு ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேநேரம் வடக்கு மாகாண சபையின் 9 நிறுவனங்களிற்குச் சொந்தமான 284 வாகனங்களில் அரச இலச்சினையோ அல்லது நிறுவனத்தின் பெயரோ இன்றிய பாவனை காணப்படுவதாகவும், இதில் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமான 100 வாகனங்களும், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் 77 வாகனங்களும், மாகாண விவசாய திணைக்களத்தின் 52 வாகனங்களும் உள்டங்குகின்றன எனக் குறிப்பிடப்படுகிறது. மாகாண சபையின் 54 வாகனங்களிற்கு நீண்ட காலமாக வரிப் பத்திரமும் பெறப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறெல்லாம் முரணகைகள் அல்லது நிதி விரயங்கள் இடம்பெற்றதாக கணக்காய்வுத் திணக்களம் குறிப்பிடும் அறிக்கை தொடர்புபட்ட சகல திணைக்களங்களிற்கும் வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அறிக்கையில் முரணகையான விடயம் ஏதும் குறிப்பிடப்பட்டிருந்தால் 14 தினங்களிற்குள் அறிக்கையிடுமாறு கோரிய போதும் எந்த திணைக்களமும் அவ்வாறு மாறுபாடு காணப்படுவதான அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.



# துடைப்பத்தை தூக்குவது யார்?



வி.எஸ்.சிவகரன்

கடந்த வாரம் எனது பத்தியை படித்து விட்டு நூற்றுக்கணக்கான தொலைபேசிகளும் குறுஞ்செய்திகளும் வந்தன. தமிழ்த் தேசிய அரசியலின் மாற்றத்திற்கு மாற்று வழி புதிய அரசியல் பயணமே, அதற்கு தயாராகுங்கள் என பட்டறிவு அனுபவத்தின் அடிப்படையில் கோடி காட்டி இருந்தேன். ஏனெனில் கடந்த பல தசாப்தங்களாக தமிழ்த் தேசிய அரசியலில் உள்ளவர்கள் எவ்வளவு தூரம் முன்னுக்குப் பின் முரணான விடயங்களை முன்னெடுத்து தமிழ் மக்களின் விடுதலை அரசியல் நகர்வுகளில் இதய சுத்தியாக இயங்கவில்லை எனும் குற்றச்சாட்டு சகல தரப்புகளாலும் முன்வைக்கப்பட்டு வருவது மறுப்பதற்கு இல்லை.

இவர்கள் மாறவோ அல்லது திருந்தவோ அல்லது தமிழ் மக்களின் நலன்சார்ந்து ஒரு குடையின் கீழ் ஐக்கியமாகவோ தயாராக இல்லை. ஆகவே தங்களது நலன் பேணும் அரசியல் அடிப்படையை மாத்திரம் வைத்து கூட்டுக்களையும் அரசியல் இருப்பையும் பயன்படுத்தி வருகின்றனர். அவ்வாறான அரசியல்வாதிகளிடமிருந்து தூய தொலைநோக்கு நன்னெறி அரசியல் செல்நெறியை உருவாக்குவதற்கு இவர்களினுடைய காலாவதியாகிய சிந்தனையை முன்நகர்த்தலாம் என எதிர்பார்ப்பதோ அல்லது அதன் மீது நம்பிக்கை கொள்வதோ முற்றிலும் பொருத்தமற்ற ஒன்றாகவே அனுபவரீதியாக உணர்த்தப்பட்டு இருக்கிறது.

ஆகவே தமிழர் அரசியல் என்பது இப்பொழுது குழு செயற்பாட்டாளர்களாக தோற்றம் பெற்றுவிட்டது. வர்க்க ரீதியான சிந்தனைகளும் எண்ணங்களும் தமிழர்களின் இருப்பைக் கேலிக் உள்ளாகி தெருவுக்கு வரக் கூடிய நிலைமைக்கி இட்டுச் செல்லும். ஆகவே கடந்த 15 ஆண்டுகளாக காய்த்தல் உவத்தல் அற்ற அரசியல் இருப்பையே தமதாக்கித் தக்க வைத்னர். கள நிலைவரத்தைப் புரிந்து கொள்ளாமல் – மக்களின் அடிப்படை மனோநிலை உணர்வுகளை விளங்கிக் கொள்ளாமல் – அரசியல் கட்சிகளின் ஒத்துணர்ந்த, ஒருமித்த கருத்தை கூட்டு பொறுப்புணர்வோடு செயல்பாட்டை முடிவுறுத்தாமல் – வெறுமனே கோட்பாட்டுக்கு மாத்திரம் மக்கள் வாக்களித்து விடுவார்கள் என்று நம்பி, களத்தை எதிர்கொள்ள முனைவதால் அரசியலில் பாதகமான விளைவுகளை சந்திக்க நேரிடலாம். அதனை முன்னுணர்ந்து கொள்ளக் கூடிய உணர்வு தெளிதிறன் நோக்கு நிலையும், ஆழமான அனுபவ செயற்பாட்டு பட்டறிவும், அந்த விளைவுகளால் ஏற்படக் கூடிய விபரீதங்களை மடை மாற்றக்கூடிய அளவுக்கு செயற்பாட்டு தளத்தின் தாங்கு திறனும், பொறுப்பு கூறலும் அவசியமாகும். அவற்றை எவ்வாறு, எவ்விதமான நிலைப்பாட்டில் நிலை நிறுத்தப் போகிறார்கள் என்கின்ற கேள்வியே இங்கு பிரதானமானது. அதற்கு எவரிடமும் பதில் இல்லை.

அதனால்தான் தொடர்ந்து வலியுறுத்துவது, கட்சிகளின் ஒருங்கிணைவு, வாக்காளர்களின் ஒருமித்த அல்லது கருத்தியல் ஒருங்கிணைவு இந்த இரண்டையும் கோட்பாட்டு நிலைக்குள் உள்வாங்கி அந்தக் கோட்பாட்டு சித்தாந்தத்தை நடைமுறைப் படுத்தக் கூடிய சாதக பாதகத்தை ஏற்றுணர்ந்து நடைமுறைப்படுத்துவதில் வருகின்ற முரண்களையும் புரிந்து கொண்டு நகர வேண்டும் அல்லது நகர்த்த வேண்டும்.

அதற்குத்தான் வள்ளுவன் சொன்னான் 'வினை வலியும் தன் வலியும் மாற்றான் வலியும் துணை வலியும் தூக்கிச் செயல்' என்று. இந்த நான்கு வலிகளையும் உணர்ந்து கொள்ளாவிட்டால் எங்கள் முன்னெடுப்புகள் எங்களாலேயே செயல்படுத்த முடியாமல் பாரிய விளைவையும் பின்னடைவையும் எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலை தோற்றம் பெற்றுவிடும். அதனை இந்த சிவில் சமூகப் பிரமுகர்கள் புரிந்து கொள்ளவில்லையா அல்லது தெளிந்து கொள்ள வில்லையா என்று தெரியவில்லை. ஆகவே தொடர்ந்து இந்தக் கட்சிகளோடு பேசுவதில் தமிழ் இன விடுதலை அரசியலில் எந்த விதமான மாறுதல்களையோ முன்னேற்றத்தையோ எதிர்பார்க்க முடியாது. ஆகவே ஒரு மாற்று அரசியல் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்கு தமிழ்த்தேசிய அரசியலுக்கு புதிய களம் அவசியம். அந்தக் களத்தை இன்று இருக்கின்ற எந்த அரசியல் வாதியும் ஒருங்கிணைத்துப் போகக்கூடிய அளவில் வாக்குக் கவர்ச்சி உள்ளவர்களோ, வல்லாளுமை உடையவர்களோ, அறிவாற்றல் இருப்பு, தெளிவு உடையவர்களோ அல்லர். அவர்கள் தத்தமது நலன் சார்ந்த அரசியல் இருப்பை மட்டும் தக்க வைத்துக் கொள்கின்ற எண்ணத்தில் தான் தொடர்ந்து செயலாற்றி வருகிறார்கள்.

ஆகவே அவர்களோடு தொடர்ந்து உரையாடுவது என்பது எவ்விதமான பயனையும் தரப்போவதில்லை. அது, கடலில் உப்பை கரைப்பதற்கு உவப்பானதாகவே போய் முடியும். விழலுக்கு இறைத்த நீர் போன்ற மாதிரியே இன்றைய தமிழ் அரசியல்வாதிகளின் நிலைப்பாடும் காணப்படுகிறது. கட்சிகள் தங்களுக்குள் இருக்கின்ற உட்கட்சி பிரச்சினையை வரும் தேர்தலுக்கு இடையில் முடிவுறுத்திக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லை. தமிழரசு கட்சியின் தலைவர் விவகாரம் நீதிமன்றத்தில் இந்த ஆண்டின் நிறைவு பகுதிக்குள் முடிவுக்கு வந்தாலும் சுமந்திரன் அல்லது சிறிதரன் இருவரில் ஒருவர் கட்சியை விட்டு விலகாத வரையில் தமிழரசு கட்சி முன்னர் போல் இணைந்து

தொடர்ச்சி ▼

# துடைப்பத்தை தூக்குவது யார்?

தொடர்ச்சி ▲

ஒன்றாக ஐக்கியத்துடன் விட்டுக் கொடுப்புடன் செயலாற்றக்கூடிய நிலை மிகவும் குறைவு. தொண்டர்கள் மத்தியிலும் இது, பல்வேறு விதமான குழப்பத்தையும் அவநம்பிக்கையையும் பொறுப்பின்மையும் வெளிப்படுத்துகின்றது. தலைவர்கள் இணைவதைவிட தொண்டர்கள் இணையாவிட்டால் களத்தில் வெற்றியைத் தமதாக்க முடியாது. குத்துவிளக்கு கூட்டணிக்கு ஆந்திரா நெய்விட்டாலும் பிரகாசிக்க வாய்ப்பு இல்லை. சைக்கிளுக்கு தற்போது யாழில் கூட பிறிவில் பிடிக்குமோ சந்தேகம் தான். மான் இளைத்துவிட்டது.

ஆகவே இவர்களிடம் என்ன வழி இருக்கப் போகிறது?

தமிழ்ப் பொது வேட்பாளர் பற்றி ஆராய்கின்ற சிவில் பிரமுகர்கள் அதனை ஒரு கட்சிக் கட்டமைப்பாக மாற்றி,ஒரு தூய அரசியலை அல்லது அவர்கள் கடந்த பல தசாப்தமாக எழுதியும் பேசியும் வந்த அரசியல் செல்நெறியை எப்படி உருவாக்க வேண்டும் என்று சொன்னார்களோ, அவர்களே அதை உருவாக்கி நிலை நிறுத்தி காட்டுவது ஒன்றுதான் இந்த குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் தீர்வாக அமையும். அமையலாம். ஏனெனில் அவ்வாறான களநிலைதான் தோற்றம் பெறக்கூடிய வாய்ப்பு உண்டு.

மீண்டும் மீண்டும் இந்தக் கட்சிகளைக் களத்தில் வெல்ல வைக்க முயற்சிப்பதில் பலனில்லை. அவர்கள் வென்று வந்து தமிழ் மக்களின் நலன்களுக்கு அப்பால் கொழும்போடு இருட்டு வீட்டு உறவில் இருந்து கொண்டு சந்தர்ப்பவாத அரசியல் செய்கின்ற போக்குத் தான் தொடர்ந்து காணப்படுகிறது. வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலிலே கொழும்பு அரசியல் மூன்று அல்லது நான்கு பிரிவுகளாக வாக்குகள் பிரியக்கூடிய நிலைமை காணப்படுவதனால் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்க கூடிய வாய்ப்பு இருக்காது. தமிழ் கட்சிகளுக்கும் அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படக்கூடிய ஆபத்து உண்டு. இவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இன்றைய நிலையில் தொடர்ந்தால் மிகப் பாதகமான விளைவை அவர்கள் சந்திக்க நேரிடும்.

இவர்களை ஐக்கிய படுத்தி நாடாளுமன்றம் அனுப்பினாலும் எந்த மாற்றமும் நிகழப் போவதில்லை. இவர்களை அரசியலில் இருந்து ஓய்வு கொடுத்து வீட்டுக்கு அனுப்புவது ஒன்றுதான் தமிழ் மக்களுக்கு செய்யும் ஆகப்பெரிய நன்மை. நேர்மையானவர்களையும் புதிய அறிவார்ந்த இளையோர்களையும் விடயங்களைப் புரிந்து கொண்டு அரசியலை முன்னெடுக்க கூடியவர்களையும் தூய அரசியலின் இருப்பை தக்க வைக்க கூடியவர்களையும் ஒருங்கிணைத்து, வழியை ஏற்படுத்த வேண்டியதே சிவில் சமூகப் பிரமுகர்களினுடைய பிரதான கடப்பாடாகும். அந்தக் கடப்பாட்டை அவர்கள் முன்னெடுத்துச் செல்வதே தமிழ் சமூகத்திற்கு அவர்கள் செய்யக்கூடிய ஆகப்பெரிய அறப்பணியாகும். அதனை அவர்கள் முன்னெடுப்பார்களா?

அரசியல் கட்சிகளுக்கு தலைமைத்துவ ரீதியான முரண்பாடுகளும் தலைமைத்துவமின்மைகளும் காணப்படுவது போல், சிவில் சமூகப் பிரமுகர்கள் மத்தியிலும் கூட இவ்வாறான நிலைப்பாடு காணப்படுகிறது.

ஏனெனில் அவர்களும் ஒருங்கிணைந்து ஒரு நிலைப்பாட்டுக்கு வந்தாலும், அதனை நடைமுறைப்படுத்துகின்ற கள யதார்த்தத்தை அவர்கள் தங்களுக்குள்ளாவது புரிந்து கொண்டிருப்பார்களா? அந்தப் புரிதலின் அடிப்படையிலான தெளிவு இந்த விடயத்தை ஆராய்வதற்குரிய அடிப்படையாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆகவே “நீ முகத்தைக் காட்டு, மக்கள் நகத்தை காட்டுவார்கள்!” – எனக் கூறி அறிஞர் அண்ணா எம்.ஜி.ஆரை அரசியலுக்கு அழைத்தது போல் இவர்கள் மக்கள் அரசியலுக்கு திரும்புவதைத் தவிர மாற்று வழி எதுவும் இருப்பதாக கள பிரதிபலிப்பு உணர்த்தவில்லை.

மக்கள் மத்தியிலே தமிழ்த் தேசிய கட்சிகளின் அங்கத்தவர்கள், தொண்டர்கள் மத்தியிலும் கூட இந்த கருத்துக்கு வரவேற்பும் எதிர்பார்ப்பும் ஆதரவும் இருப்பதனால் அதனை முன்னெடுத்துச் செல்ல முனைகின்ற தரப்புகள் இதில் அக்கறை செலுத்த வேண்டியது அவசியமாகும்.

அதை விடுத்து அறிவுபூர்வமாக நிகழ்கால நிலைமையைப் புரிந்து கொள்ள வேண்டும். கேள்வி கேட்க முனைபவர்களை துரோகிகள் என்றோ அல்லது அரசியல் அறிவு அற்றவர்கள் என்றோ, தெற்கு அரசியல் கட்சிகளின் முகவர்கள் என்றோ, பணம் பெற்று பேசுகிறார்கள் என்றோ அல்லது தூதரகங்களின் முகவர்கள் என்றோ மூன்றாம் தர விமர்சனம் செய்வதும் எழுதுவதும் சிறுபிள்ளைத்தனமான விடயமாகவே தோன்றுகிறது.

அறிவார்த்தமான விடயங்களை தெளிவு உணர்வோடு அணுக வேண்டும். கருத்துக்களுடன் கருத்து மோதல் செய்து அக்கருத்தை நிலை நிறுத்தி, கோட்பாடாக்க வேண்டியதே சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவர்த்தம்.

அதை விடுத்து, விமர்சனத்தை ஏற்க முடியாமல் தனி மனித தாக்குதல் நடத்துவதும், தனி மனித விமர்சனங்களுக்குள் புகுவதும் ஓர் ஆரோக்கியமான ஜனநாயக சமூகக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு ஏதுவான நிலை இல்லை. விமர்சனத்தைக் கண்டு அஞ்சுபவர் வீதியில் செல்ல லாயக்கற்றவர்.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் கூற்றின்படி இலங்கை தேசத்தின் ஜனாதிபதி தேர்தல் என்பது சிங்கள தேசம் தன்னுடைய தலைவரை தீர்மானிக்கின்ற ஒரு தேர்தலாகவே காணப்படுகிறது. இதில் தமிழர் தேசம் பயனற்று அலட்டிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றார்.

காலத்துக்குக் காலம் வருகின்ற சகல சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களும் தமிழ் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றுகிறார்கள் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

தமிழ் மக்களின் விருப்போடு தெரிவு செய்யப்பட்ட மைத்திரிபால சிறிசேன கூட தமிழர் தேசத்திற்கு பங்காற்றவில்லை. சிறுபான்மையினரோடு நல்லுறவைப் பேணுபவராகக் காட்டிக் கொள்கின்ற ரணில் விக்கிரமசிங்க கூட இனப்பிரச்சனைத் தீர்வு விவகாரத்தில் இதுவரை எந்தவிதமான ஆக்கபூர்வமான விடயங்களையும் முன்னகர்த்த வில்லை. வெறுமனே காலத்தைப் போக்கும் விதமாக நழுவல் போக்கே காணப்படுகின்றது.

ஆகவே இதில் எவரையும் நம்ப முடியாது என்கின்ற நிலைப்பாடும் நிதர்சனமானதே. ஆகவே துடைப்பானை எடுத்து தமிழரின் தற்போதைய அரசியல் சாக்கடையை தூய்மைப்படுத்துவதற்கு சிவில் சமூகப் பிரமுகர்கள் முன்வருவார்களா அல்லது வழமை போல் கருத்துருவாக்கத்தோடு காலாவதியாகப் போகிறார்களா அல்லது காலத்தின் கண்ணாடியாகப் பிரதிபலிக்கப் போகிறார்களா? களத்தின் கதாப்பிரசங்கியாகப் போவது யார்?

# தேர்தல்களைத் தடுப்பவர்கள் ஜனநாயக விரோதிகளாவர்!

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி தெரிவிப்பு!



(பழுவூரான்)

ஒரு ஜனநாயக நாட்டில் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்பு தேர்தல்களை நடத்தி மக்களின் ஆணையை பெற வேண்டும். அவ்வாறு நடைபெறாமல் விட்டால் அவர்கள் ஜனநாயக – மக்கள் விரோதிகள் ஆவர். எங்களது கட்சியின் நிலைப்பாடு உரிய காலத்தில் தேர்தல்கள் நடைபெற வேண்டும் என்பதே என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

தனது கட்சி அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சிங்கள பௌத்த தலைவர்களுக்கும் தற்போதுள்ள ஜனாதிபதிக்கும் தேர்தல்களை ஒத்திப் போடுவது என்பது கைவந்த கலையாகும்.

2018 ஆம் ஆண்டு தற்போது உள்ள ஜனாதிபதி அப்போதைய பிரதமராக இருந்த காலத்தில், எங்களது தமிழ் தேசிய கூட்டமைப்பு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் ஆலோசனைக்கமைவாக நாடாளுமன்றத்தில் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டு இன்று வரை மாகாண சபைத் தேர்தல் நடைபெறாமல் உள்ளது.

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை ஒத்தி வைக்க முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். நாடாளுமன்றம், நீதிமன்றம் ஊடாக அனுமதிகளைப் பெற்று, மக்கள் ஆணையின் மூலம்தான் தேர்தல்களைப் பிற்போட முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாறுபட்ட கருத்துகளுக்கு ஜனாதிபதி உரிய பதில்களை வழங்காது உள்ளபோது தேர்தல்கள் எவ்வாறு நடக்கும் என பொதுமக்களும் குழம்பிப் போய் உள்ள நிலையில் ஒரு ஜனநாயக நாட்டில் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்பு தேர்தல்களை நடத்தி மக்களின் ஆணையை பெற வேண்டும். அவ்வாறு நடைபெறாமல் விட்டால் அவர்கள் ஜனநாயக மக்கள் விரோதிகள் ஆவார்.

எங்களது கட்சியின் நிலைப்பாடு உரிய காலத்தில் தேர்தல்கள் நடைபெற வேண்டும் என்பதே. – என்றார்.






# பாக்குநீரிணையை நீந்திக் கடந்த மாணவனின் சாதனையை கௌரவித்து முத்திரை வெளியீடு


(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி மாணவன் ஹரிகரன் தன்வந்த், மிகக் குறைந்த வயதில் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த சாதனையை கௌரவித்து,நேற்று முன்தினம் அஞ்சல் திணைக்களத்தின் முத்திரை வெளியீட்டுப் பணியகம், ரூபா 25 பெறுமதியான புதிய முத்திரையை திருகோணமலையில் வெளியிட்டது.


இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் வரலாற்றில் மிக குறைந்த வயது கொண்டவருக்கு முத்திரை வெளியிடுவது இதுவே முதல் முறையாகும்.

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில், அஞ்சல் மாஅதிபர் ருவான் சத்குமார இவ் முத்திரையையும், முதல் நாள் உறையையும் வெளியிட்டு வைத்தார்.

நிகழ்வில் அஞ்சல் திணைக்களத்தின் செயற்பாட்டு பிரிவிற்கான பிரதி அஞ்சல் மாஅதிபர் ரஜித்த எம் ரணசிங்கவும் கலந்து கொண்டார்.





# ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பிரசுரம் வழங்கல்

வரும் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் யாழ் மத்திய பஸ் நிலையத்தில் நேற்று மாலை துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சி அரசமைப்பு நீக்கப்பட்டு சமஷ்டி அரசமைப்பு உருவாக்கப்படுவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும் வரை ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிப்போம் என்ற தொனி பொருளில் மக்களிடையே துண்டு பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளர் கனகரத்தினம் சுகாஸ், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.










# இன்றைய ராசி பலன்கள் - 02.06.2024




இன்று உங்கள் பொறுமையை சோதிக்கும் கடினமான சூழ்நிலை காணப்படும். அதனால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். நீங்கள் சாதகமான பலன்களைக் காண பொறுமை மற்றும் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று அதிகப் படியான பணிகள் காணப்படும். நீங்கள் பணிகளை ஒழுங்குபடுத்தி அதன்படி திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப் படுத்துவீர்கள். கவனமற்ற வார்த்தைகளால் உறவு பாதிக்கும். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று நன்மையான பலன்கள் கிடைக் கும். வாழ்வின் நன்மை தீமை உணர் வதற்கான அனுபவ அறிவை உணரும் நாள். நற்பலனகள் காண சுமூகமான உறவை பராமரிப்பது நல்லது.

பணியிடத்தில் சவால்கள் நிறைந்திருக் கும். என்றாலும் நீங்கள் இதனை சமாளித்து நற்பெயர் பெறுவீர்கள். வளர்ச்சி காண நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

உங்கள் துணையை புரிந்து கொள்வதன் மூலம் இனிமையான வார்த்தைகளை பேச இயலும். நீங்கள் உங்கள் துணையிடம் அனுசரித்து நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஆரோக்கியமாக ஆற்றலுடன் காணப்படு வீர்கள். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் காணப் படாது.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்களிடம் இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்திருக் கும். அதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் வெற்றி கிடைக்கும் நாள்.

இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகமாக இருப்பீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு ஒன்றாகச் சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். சீரான பணப்புழக்கம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக் காது. உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் முழு முயற்சி எடுக்க வேண்டும். விரைவாக செயலாற்றுவதை தவிர்ப் பதன் மூலம் பாதகமான சூழ்நிலையை தவிர்க்கலாம். ஆன்மீக ஈடுபாடு உங்க ளுக்கு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் அன்றாட பணிகளை கவன முடன் கையாள வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். ஆரோக்கியமான உறவை பாரமாரிக்க இத்தகைய பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதியில் ஏற்ற இறக்கங்கள் உங்களுக்கு கவலை அளிக்கும். குறைவான பணப்புழக்கம் காரணமாக நீங்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதை கடின மாக உணர்வீர்கள்.




இன்று விருப்பமான பலன்களை அடைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இன்று உங்கள் செயல் களில் திருப்தி காண்பீர்கள். மந்திர ஜெபம் மற்றும் பிரார்த்தனை மூலம் நீங்கள் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் நீங்கள் சிறந்த பலனைக் காண முறையாக திட்டமிட வேண்டும். அனுசரித்துப் போவதன் மூலம் பலன் பெறலாம்.

இனம் தெரியாத காரணத்தால் உங்கள் துணையிடம் எரிச்சலடைய வாய்ப்பு உள்ளது. இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். உறவில் மகிழ்ச்சி நிலவ உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

உங்கள் செலவுப் பழக்கத்தில் கவனம் தேவை. சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். இன்று செலவுகள் அதிகரித்து காணப்படும்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறை வேறும். அதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பது இன்று உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் பணியில் மிகுந்த திருப் தியை உணர்வீர்கள். உங்கள் மேலதி காரிகளின் நல்லாதரவு பெறும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணயுடன் நல்லுறவை பகிர்ந்து கொள் வீர்கள். நீங்கள் பரஸ்பரம் இனிமையான வார்த் தைகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் அன்பு வளரும்.

அதிக பண வரவு உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் மனஉறுதி காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை பெற்றுத் தரும்.

உங்கள் பணியின் மூலம் நீங்கள் பல நற்பலன்களைக் காணலாம் பணி யிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்களின் சகஜமான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பரா மரிப்பீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். அமைதியான சூழ்நிலை காரணமாக சிறப்பாக உணர் வீர்கள்.




இன்று நீங்கள் உங்கள் உணர்வு களையும் உணர்சிகளையும் கட்டுப் படுத்த வேண்டும். இன்று நன்மையான பலன்கள் காண நீங்கள் பொறு மையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். இதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

சில கருத்துக்களை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்ளும் போது கடுமையாக நடந்து கொள்வீர்கள். எனவே சகஜமாக நடந்து கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்ய நேரும். அது உங்க ளுக்குக் கவலை அளிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.06.2024




இன்று வளர்ச்சி நோக்கி செயலாற்ற உகந்த நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய நீங்கள் உங்கள் புத்திசாலித்தனம் மற்றும் திறமையை பயன்படுத்துவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை குறித்த நேரத்துக்கு முன்பே முடித்து விடுவீர்கள்.

உங்களின் இனிமையான வார்த்தை களால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள் மற்றும் ஒரு வரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் கிடைக் கும் அது உங்களுக்கு தக்க நேரத்தில் உதவிகரமாக இருக்கும்.




இன்று முடிவுகள் எடுக்கும் போது அமைதியும் கட்டுப்பாடும் தேவை. எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்றாக யோசிக்க வேண்டும்.அனுசரணையான அணுகுமுறை நன்மை அளிக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.

பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. அதிகப் பணிகள் சுமையாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. அகந்தைப் போக்கு உறவில் மகிழ்ச்சியை ஏற்படுத்தாது.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். உங்கள் செலவுகளில் கட்டுப்பாடு தேவை.

சிறப்பான ஆரோக்கியத்துக்கு முறையான உணவு முறையை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.




இன்று மிகவும் துடிப்பான நாளாக அமையும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களின் உறுதியான போக்கு மற்றும் மன உறுதி மூலம் வெற்றி காண்பீர்கள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். நீங்கள் சிறப்பாக செய லாற்றுவீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள இயலும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். பணத்தை சுப காரியங்களுக்கு நீங்கள் பயன்படுத்த இயலும்.

இன்று சௌகரியங்கள் அதிகம் காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




சில குடும்பப் பிரச்சினை காரணமாக கவலையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் சிறப்பாக செய லாற்றலாம். முக்கிய முடிவுகள் எடுப் பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக் காது. இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு நடப்பதாக நீங்கள் உணர்வீர்கள். என்றாலும் நீங்கள் கவலைப் படாதீர்கள். உங்கள் துணை உங்களிடம் முழு அன் போடு இருப்பார்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இன்றைய அடிப்படை தேவைகளைக் கூட உங்களால் பூர்த்தி செய்து கொள்ள இயலாது.









# அமைச்சர் ஜீவன் எதிராகப் பொலிஸில் முறைப்பாடு
# எனினும் பின் அது வாபஸ் பெறப்பட்டு சுமுகத் தீர்வு





இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பீ.சக்திவேல் ஆகியோருக்கு எதிராக நுவரெலியா பொலிஸில் முறைப்பாடளிக்கப் பட்டுள்ளது. எனினும் அது பின்னர் கைவாங்கப்பட்டது

களனிவெளி பெருந்தோட்ட நிறுவனத்திற்கு உட்பட்ட நானுஓயா – உடரதல்ல உள்ளிட்ட 6 தோட்டங்களில் தேயிலைக் காணியில் கோப்பி பயிர் செய்வதற்கு தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்திருந்தது.

இதற்கு எதிர்ப்பு வெளியிட்ட மூன்று தோட்டத் தலைவர்கள் பணி இடை நீக்கம் செய்யப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து அந்த தோட்டங்களின் தொழிலாளர்களால் தொடர் பணிப் புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அந்த தோட்டப் பகுதி மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்டோர் தொழில் திணைக்களத்தில் கடந்த 30 ஆம் திகதி பேச்சு நடத்தியிருந்தனர்.

அந்த பேச்சு தோல்வியடைந்தமையினால், அன்று மாலை நுவரெலியா பீட்ரு தோட்ட தொழிற்சாலைக்கு சென்ற அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்டோர் பணியில் இருந்த தொழிலாளர்களை இடைநடுவே அழைத்து தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்தனர்.

அத்துடன், அந்த தோட்ட முகாமையாளரை தொழிற்சாலைக்குள் சில மணிநேரம் தடுத்து வைத்திருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், களனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் தோட்ட அதிகாரிகளால் அமைச்சரான ஜீவன் தொண்டமானுக்கும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் பி.சக்திவேலுக்கும் எதிராக நேற்று நுவரெலியா பொலிஸில் முறைப்பாடளிக்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டமைக்கு முரணாக பொலிஸில் முறைப்பாடளிக்கப்பட்டமைக்கு எதிராக அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட கட்சியின் ஆதரவாளர்கள் நேற்று நுவரெலியா பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

பின்னர் அவர்கள் பொலிஸ் உயர் அதிகாரியுடன் கலந்துரையாடிய நிலையில், தோட்ட நிர்வாகத்தினால் அந்த முறைப்பாட்டை மீளப்பெறுவதற்கு இணக்கம் வெளியிடப்பட்டுள்ளதாக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பீ.சக்திவேல் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.



# டினோஜன் வாள்வெட்டுக்குழுவின் அட்டகாசத்தில் அம்பாறை ஆலையடிவேம்பில் ஏழு பேர் படுகாயம்!

## பிரதேச மக்கள் பெரும் பயப்பீதியில் பொலிஸ் அசமந்தம்





(கனகராசா சரவணன்)

அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேசத்தில் டினோஜன் வாள்வெட்டுக் குழு வீடு ஒன்றில் புகுந்து இளைஞர் ஒருவர் மீது தாக்குதலில் மேற்கொண்டதுடன் வீதியால் சென்றவர்கள் மீது மேற்கொண்ட தாக்குதலில் 7 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அந்தக் குழு வீடு ஒன்றில் பொருள்களை அடித்துச் சேதமாக்கிவிட்டுத் தப்பி ஓடியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளதாக அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்தனர்.

டினோஜன் வாள்வெட்டுக் குழுவினருக்கும் வாச்சிக்குடா பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கும் இடையே மரணவீடு ஒன்றில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதன்காரணமாக அந்த இளைஞனைப் பழிவாங்குவதற்காக அவரின் வீட்டுக்கு நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் டினோஜன் வாள் வெட்டுக் குழுவைச் சேர்ந்த பத்துக்கு மேற்பட்டவர்கள் மோட்டர் சைக்கிள்களில் வாள்களுடன் தேடிச் சென்றுள்ளனர். அவர் அங்கு இல்லாத நிலையில் அந்தப் பகுதியில் வீதியில் வந்த அந்த இளைஞரின் நண்பன் மீது தாக்குதலை மேற்கொண்டமையை அடுத்து அவர் அங்கிருந்து தப்பி ஓடி அவரது சகோதரியின் வீட்டினுள் புகுந்துள்ளார்.

இதனையடுத்து அவரைத் துரத்திச் சென்ற வாள் வெட்டுக்குழுவினர் அவரின் சகோதரியின் வீட்டின் பொருள்களை உடைத்து அந்த இளைஞன் மீது தாக்குதலை மேற்கொண்டனர். இதனை தடுக்க சென்றவர்கள் மீதும் வாளால் வெட்டித் தாக்குதல் நடத்தினர்.

அதேவேளை இந்த வாள்வெட்டு குழுவின் அராஜகத்தையடுத்து அதைத் தடுக்கச் சென்றவர்கள், வீதியால் சென்றவர்கள் என எல்லோர் மீதும் வாளால் வெட்டித் தாக்குதல் நடத்தினர். இதில் 7 பேர் படுகாயமடைந்தனர். தாக்குதலை மேற்கொண்ட குழுவினர் பின்னர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர்.

இதில் படுகாயமடைந்தவர்கள் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தத் தாக்குதலை மேற்கொண்ட குழு தலைமறைவாகியுள்ளதாகவும் அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை இந்த தாக்குதலை மேற்கொண்ட டினோஜன் வாள் வெட்டு குழு அக்கரைப்பற்று நீதிமன்றக் கட்டடத்திற்குத் தீவைத்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் வெளிவந்துள்ளது எனவும், பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையது எனவும் கூறப்படுகின்றது.

இவர்கள் தொடர்சியாக இந்த பிரதேசத்தில் இடம்பெறும் ஆலய உற்சவங்கள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற பொது நிகழ்வுகளில், மது போதையில் சென்று அராஜகத்தில் ஈடுபட்டு, ஒலிவாங்கிகள் மற்றும் பொருள்களை அடித்து உடைத்து சேதமாக்கியுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

இந்த வாள்வெட்டுக் குழுவின் தொடர்சியான அட்டகாசத்தினால் பாடசாலை சிறுவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை அனைவரும் அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர் எனவும், இவர்களுக்கு எதிராகப் பொலிஸார் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காது அசமந்த போக்கில் இருந்து வருகின்றனர் எனவும் பிரதேச புத்திஜீவிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆலய நிர்வாகத்தினர் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.



# மூன்று நாள் இசைத்தமிழ் விழா கொழும்புத் தமிழ் சங்கத்தில்!

## சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலை ஸ்தாபிதம்

( வி.ரி.சகாதேவராஜா)

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவையொட்டி இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் மூன்று நாள் இசைத்தமிழ் விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் கோலாகலமாக ஆரம்பமாகியது.

துறவற நூற்றாண்டை யொட்டி கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் சுவாமிகளின் திருவுருவச் சிலை நிறுவப் பட்டுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் யூ.அனிருத்தனின் ஏற்பாட்டில் கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமான இந்நிகழ்வுகள் நேற்றும் தொடர்ந்து இன்றும் நடைபெறுகின்றன.

முன்னதாக நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் சுவாமி விபுலானந்தரின் திருவருவச்சிலையுடன் இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக்கான தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மாநந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் சைவ மங்கையர் வித்தியாலயத்திலிருந்து கொழும்புத் தமிழ்ச் சங்கம் வரை ஊர்வலம் இடம்பெற்றது. வழிநெடுக இந்துக்கள் நிறைகுடம் வைத்து வழிபட்டனர்.

பின்பு 5 மணியளவில் தமிழ்ச் சங்கத்தில் சுவாமி விபுலானந்தரின் சிலை ஆறுமுகநாவலரின் சிலைக்கு இடப் புறமாகத் திறந்து வைக்கப்பட்டது.

கொழும்பு தமிழ்ச்சங்க 82 வருட கால வரலாற்றில் முதல் தடவையாக நிறுவப்பட்ட இத் திருவுருவச் சிலை, தற்போதைய தலைவரும் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி க.இரகுபரன் தலைமையில் நிறுவப்பட்டது.

இச்சிலையை அன்பளிப்பு செய்த சாஹித்தியரத்னா தி. ஞானசேகரன் - திருமதி ஞானலக்ஷ்மி ஞானசேகரன் தம்பதியினர் மங்கல விளக்கேற்றி அரங்க நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

தொடர்ந்து சுவாமி அக்ஷராத்மாநந்தா ஜீ மகராஜ் சிலைக்கு மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து ஏனையோர் மலரஞ்சலி செலுத்தினர்.

முதல் நாள் நிகழ்வு தமிழ்ச் சங்க தலைவர் கலாநிதி க.இரகுபரன் தலைமையில் நடைபெற்றது. அங்கு ஆசியுரையை சுவாமி அக்ஷராத்மாநந்தா ஜீ மகராஜ் நிகழ்த்த, வரவேற்புரையை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் நிகழ்த்தினார்.

வாழ்த்துரையை காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்ற ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா நிகழ்த்த, தொடக்க உரையை மட்டக்களப்பு தமிழ்ச் சங்க தலைவர் சைவப் புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி நிகழ்த்தினார். சாஹித்திய ரத்னா தி. ஞானசேகரன் விசேட உரையாற்றினார்.

அங்கு சுவாமி தொடர்பான பிரசுரங்கள் அதிதிகள் பங்குபற்றுனர்களுக்கு வழங்கப்பட்டன.

விசேட கலைநிகழ்ச்சிகள் மேடையேறின.

பேராசிரியர்களான சிவலிங்கராஜா, மகேஸ்வரன், முன்னாள் பணிப்பாளர் உடுவைதில்லை நடராஜா மற்றும் பல அறிஞர்களும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் அவரது பாரியார் கீதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

















